திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: போலீசைப் பற்றிக் கேட்டால், முதலமைச்சருக்கு அனுப்புவீர்களா அல்லது தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் கேட்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் நலத்துறை அமைச்சர் விடை அளிக்கத் தயாராக இருக்கிறார். அவர் சொல்கிற விடையை நீங்கள் கேளுங்கள். அதற்குப் பிறகு அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்று நீங்கள் பாருங்கள்.

திரு. என். சங்கரய்யா: சட்ட வியாக்கியானத்தைப் பற்றி நான கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட வினக்கத்தினை நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பொ. விஜய ராகவன்; ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து, ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. துரைமுருகன்: எங்கள் கட்சியின் சார்பிலே நான் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் திருவாளர்கள் விஜய ராகவன், ஹேமச்சந்திரன், மணி, செல்லமுத்து ஆகிய நான்கு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் இதை அஜெண்டாவிலே சேர்த்த பிறகு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: அஜெண்டாவிலே சேர்த்தாகி விட்டது என்று போர்டா போடுகிறார்கள். நான் நேற்று கொடுத்திருக் கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே; இல்லை யென்றால் புக்கிங் க்ளோஸ் என்று போடுங்கள்.

Excuse me. yesterday I gave a notice to the Speakers Office.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேற்று கொடுத்தீர் கள். அது சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

1983 சனவரி 28]

திரு. துரைமுருகன்: எங்கள் கட்சியின் சார்பிலே நான் கொடுத்திருக்கிறேன் நேற்று கொடுத்தேன். நேற்று 12 மணியோடு கால் அட்டென்ஷன் எடுத்து முடிக்கப்படும் என்றா இருக்கிறது. ஆகையால் நான் கொடுக்கலாம். இன்று 8 மணிக்கும் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நேற்று 12 மணிக்குக் கொடுத்தீர்கள். அஜெண்டா காலையிலேயே தயாராகி விட்டது

திரு. துரைமுருகன்: புக்கிங் க்ளோஸ் என்று போடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 10 வருடங்களாக உறுப்பினராக இருப்பவர்களுக்கு 54–வது விதியின் கீழ் எந்த நேரத்தில் கொடுக்க வேண்டுமென்று தெரிந்திருக்க வேண்டும்

திரு. துரைமுருகன் சிலசமயங்களில் அப்பொழுது கொடுத்து அப்பொழுதே கூட எடுத்திருக்கிறீர்கள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னிய குமரி மாவட்டத்தில் 1-11–1982 முதல் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் போனஸ் கோரி செய்து வரும் வேலை நிறுத்தம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் இந்தக் கவன ஈர்ப்பில் 1.4.1982 என்று இருக்கிறது அது 1–11–1982 என்று இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் சுமார் 2500 தொழிலாளர்களுக்கு போனசுக்கு பதிலாக கருணைத் தொகை (ex-gartia) வழங்கப் படவேண்டும், விடுப்பு நாட்களில் பணிபுரிந்துள்ள காவலர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் மற்றும் ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டபடி பஞ்சப்படியை தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் என்ற 3 கோரிக்கைகளை முன்வைத்து, மேற்கண்ட நிறுவனத்தில் இயங்கி வரும் 4 தொழிற்சங்கங்கள் முறையே கன்னியாகுமரி மாவட்ட எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.), குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யு.சி. குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (டி.என்.டி.யு.சி.) மற்றும் குமரிமாவட்ட எஸ்டேட் ஒர்க்கர்ஸ் ப்ராகிரசிவ் யூனியன் (எல்.பி.எப்.) ஆகியவை 1–7–82 அன்று அடையாள வேலை நிறுத்தம் மற்றும் 2–7–82 முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்வதாகவும் அறிவித்தனர்.

இத்தாவாவில் சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் 25-6-82, 27-7-82, 27-9-82, 14-10-82, 8-11-82, 17-12-82 மற்றும் 18.12.82 ஆகிய தேதிகளில் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டார். 27-7-82 அன்று இணை ஆணையர் தனது அறிவுரையில் காவலர் பணியில் இருந்து வந்த தொழிலாளர் களுக்கு 25-12-81 காலத்திற்கு முன்னாலுள்ள பணிக்காலத்திற் குண்டான பாக்கித் தொகையை நிர்வாகம் வழங்கவேண்டும் என்றும் அதனால் தொழில் அமைதியின்மை தேவையில்லை யென்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தினர். இணை ஆணையரின் தலையீட்டால் தொழிற்சங்கங்களால் 1-7-82 அன்று முதல் நிர்ணயிக்கப்பட்ட தர்ணா மற்றும் போராட்டங் கள் தள்ளி வைக்கப்பட்டன. இறுதியாக மேலே சென்னை நான்கு தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் 1.11.82 முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். வேலை நிறுத்தம் இன்றும் நடக்கிறது. 2,488 தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

இணை ஆணையர் மேற்கொண்ட சமரசப் பேச்சு வார்த்தை களில் சுமுக முடிவு ஏற்படாததால் சமரச முறிவு அறிக்கையினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பின ரவர்கள் 1-4-1982 என்றுதான் அறிக்கையிலே கொடுத்திருக் கிறார்கள். அவர் என்னைத் திருத்திக் கொள்ளச் சொல் கிறார். நான் அந்த அறிக்கையை வாங்கிப் பார்த்தேன். 1-4-1982 என்றுதான் இருக்கிறது. ஆகவே உறுப்பினரவர்கள் தான் திருத்திக் கொள்ள வேண்டும்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்தப் பிரச்னை வனத்துறை 1977 ஆம் ஆண்டிலே தொழிற் சங்கங்களோடு ஒரு ஒப்பந்தம் போடப்பட்ட நேரத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டது. போனசோ அல்லது எக்ஸ்கி- ரேஷியாவோ கொடுப்பதற்கு அரசுக்கு சிபார்சு செய்யப்படும் என்று ஒத்துக்கொள்ளப்பட்டதாலும், வன இலாக்கா அமைச் சருடைய நேரடிப் பொறுப்பில் உள்ளதாலும் அரசே இது சம்பந்தமாக ஒரு முடிவு செய்ய வேண்டிய விஷயமாக இருப்பதாலும் 87 நாட்களாகத் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடந்து அரசுக்கும் பெரிய அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கும் பிரச்னையாக இருப்பதாலும் இந்த நிலைமை நீடித்திருப்பதற்கு விடாமல் முதல்வரவர்களோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ உடனடியாக இதிலே தலையிட்டு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தித் தொழிலாளர் களுக்கு எஸ்க்கிரேஷியா கொடுக்க சிபார்சு செய்யப்படும் என்று ஒத்துக்கொண்டிருப்பதாலும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வன இலாக்கா அமைச்சரவர்களால் தொழிற்சங்கங் களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்த பின்னணியிலே

தொழிலாளிகள் அவகாசம் கொடுத்த பின்தான் வேலை நிறுத்தம் ஏற்பட்டதினாலும் இந்தப் பிரச்னையிலே ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தவேண்டும். ஏற்கனவே போக்குவரத்துத்துறை அரசினுடைய துறையாக இருந்த நேரத்தில் எக்ஸ்கிரேஷியா கொடுக்கப்பட்டிருக்கும் முன்னுதாரணம் தமிழகத்திலே உண்டு என்பதெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, அந்தப் பிண்ணணியிலே தொழிலாளர்களுக்குப் போனசோ அல்லது எக்ஸ்கிரேஷியாவோ கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு நடத்தும் தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் நேரடியாகவோ அல்லது டிபார்ட்மென்ட் மூலமாகவோ நடத்தும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சட்டப் பிரகாரம் போனஸ் எலிஜிபிலிட்டி இல்லை என்று மத்திய அரசால் 1965 ஆம் ஆண்டு கொண்டு வரப்பெற்ற சட்டத்தில் உள்ளது.

அதையொட்டி அவர்களுக்குப் போனஸ் தரப்படவில்லை. கோரிக்கை எக்ஸ்கிரேஷியா தரப்படவேண்டும் என்பது. எனவே சட்டப்பூர்வமாக கொடுக்கப்படாத ஒரு கோரிக்கை என்பதாலே எக்ஸ்கிரேஷியா கொடுப்பது என்பது ஒரு இலாகா முடிவெடுத்து விடக்கூடிய காரியமல்ல. ஏனென்றால் அரசு நடத்தக்கூடிய பல நிறுவனங்கள் இருக்கின்றன, என்னைப் பொறுத்தவரையில் அது கேபினட் வரையில் எடுத்துச் செல்லவேண்டிய மேஜர் பாலிசி மேட்டர் என்று கருதுகிறேன். இப்போது இது லேபர் இலாகாவால் பலமுறை பேசப்பட்டு சமரச முறிவு ஏற்பட்டு, சமரச முறிவு அறிக்கையும் அரசிடம் வந்திருக்கிறது. 1-11-1982 வரையில் இதற்காகத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வது—என்னைப் பொறுத்தவரை இதை ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்—தேவையில்லாத பிரச்சினை. அதைப் பின் வாங்கிக் கொள்ளுங்கள். எக்ஸ்கிரேஷியா கொடுப்பது என்பது நான் ஏற்கெனவே சொன்னதைப்போல அது ஒரு மேஜர் பாலிசி. தொழிலாளர் நல இலாகாவைப் பொறுத்தவரையில் சமரச முறிவு அறிக்கை வந்திருக்கின்றது. அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே வன இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு முடிவெடுத்துக் கொடுப்பதற்கு அவகாசம் வேண்டும் என்று கேட்டு, அதை ஒத்துக்கொண்டு வேலை நிறுத்தத்தை ஒத்திப் போட்டதற்குப் பிறகு, அதற்குப் பின்னர் ஒரு மாதம் கழிந்த பிறகுதான் வேலை நிறுத்தம் ஆரம்பித்தது என்பதாலும் பாலிசி டெசிஷன் என்பது அரசே எடுக்க வேண்டும் என்பதால்தான்

இந்தப் பிரச்சினை இங்கே கிளப்பப்பட்டது என்பதை கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். மறியல் போராட்டத்தில் சென்ற அந்தத் தொழிலாளர்கள் கைது செய்யப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதையும் அரசு கவனத்திலே கொண்டு, இந்த பிரச்சினையிலே அரசு விரைவிலே முடிவெடுத்து, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

*திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். மைய அரசின் சட்டப்படி போனஸ் வழங்க இடம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் துறையாக இருந்தாலும்கூட, அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் எந்தவிதமான சலுகையும் இவர்களுக்கு இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் செப்டம்பர் மாதம் ஏற்கனவே வனத்துறை அமைச்சரோடு பேசி, மேலும் ஒரு மாதம் அவகாசம் கொடுக்கப்பட்டு, 1-11-1982 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அரசுக்குப் பல கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களும் பல சங்கடங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். கடைசியாக அமைச்சர் அவர்கள் இது கொள்கை பிரச்சினை என்று சொல்லி விட்ட காரணத்தினாலேயும், தொழிலாளர்கள் கடந்த 88 நாட்களாக வேலை நிறுத்தம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து அரசின் எல்லாத் துறைகளுக்கும் தகவல் தரப்பட்டும், இது கொள்கைப் பிரச்சினை என்று சொல்லுகிறார்கள். எனவே இவைகளைப் பேசி முடிப்பதற்காக இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வனத்துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சேர்ந்து விவாதிக்கவேண்டும் இனியும் காலம் கடத்தாமல். துரிதமாக பேசி முடிப்பதற்கு, கொள்கையில் ஒரு மாற்றம் கண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு எக்ஸ்கிரேஷியா கொடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்வதோடு, மறியலிலே ஈடுபட்டு கைதானவர்களை விடுதலை செய்து, இந்தப் பிரச்சினையை சுமுகமாக முடிக்க அரசு அவசரமான நடவடிக்கை மேற்கொள்ள முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது இந்த வேலை நிறுத்தம் காரணமாக பல கோடி ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இதுவே எக்ஸ்கிரேஷியா கொடுக்கலாமா வேண்டாமா என்பதை அரசு ஆழமாக பரிசீலனை செய்வதற்கு ஏதுவாகி விட்டதோ என்று நான் அஞ்சுகிறேன்.

1983 சனவரி 28] [திரு. எஸ். இராகவானந்தம்]

(முற்பகல் 11-10)

சட்டப்பூர்வமாக இல்லாத ஒன்றை கொடுக்கும்போது எக்ஸ்கிரேஷியா வேண்டுமென்று—அது ஒரு மேஜர் பாலிசி மேட்டர். அதைப் பேச்சு வார்த்தைகளின் மூலமாக பேசி, முடிவு எடுத்திருக்கலாம். இப்போது வேலை நிறுத்தம் 1–11-லே யிருந்து செய்து பல கோடி ரூபாய்க்கு நஷ்டம் உண்டுபண்ணி விட்டதாக அவர்களே, ஒத்துக்கொள்கிற காரணத்தால் இந்த அரசு இதை வகு ஆழமாகப் பரிசீலனை செய்வதற்கு கால தாமதம் ஆகும் என்றுதான் கருதுகிறது. ரிப்போர்ட் எங்களுடைய லேபர் டிபார்ட்மென்டுக்கு வந்திருக்கிறது. அதிலே மூன்று பிரச்சினைகளிலே, இரண்டு பிரச்னைகள் தீர்ந்துவிட்டன. இது எக்ஸ்கிரேஷியா பிரச்னை. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் வேலைநிறுத்தத்தை பின்வாங்கிக்கொள்ளுங்கள். அரசு இதைப் பற்றி கொடுப்பதா, இல்லையா என்பதைப்பற்றி இப்போது இலாகாவிற்கு மட்டுமல்லாமல், யார் யாருக்கு எலிஜிபிலிட்டி இல்லையோ அவர்களுக்கு எல்லாம் எக்ஸ்கிரேஷியா கொடுப்பதா என்பதைப் பற்றிக் கூட நாங்கள் பரிசீலனை செய்யவேண்டுமென் பதைப் பற்றி, இதை லேபர் இலாகாவிலேயிருந்து மற்ற இலாக்காக்களுக்கு கடிதம் எழுதுவதற்கு தயாராக இருக்கிறது, இந்த லேபர் இலாக்கா என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் 3 மாத காலமாக தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருவதால், இதிலே இருக்கக்கூடிய பாலிசி மேட்டர் குறித்து ஏன் விரைவான நடவடிக்கை எடுக்கவில்லை, அவர்களுடைய பிரசினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு முதல் அமைச்சர் அவர்களும், இலாகா அமைச்சர் அவர்களும் தலையிட்டு உடனடியாக சுமுகமாகத் தீர்த்து வைப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்னை மீது வேலைநிறுத்தம் செய்திருக்கத் தேவையில்லை. ஏன் என்றால் இது சட்டபூர்வமாக இல்லை. பேச்சு வார்த்தை களின் மூலமாகத்தான் இதை வாங்கமுடியும்—எக்ஸ்கிரேஷியா என்று உங்களுக்குத் தெரிந்த பிறகும் வேலைநிறுத்தம் செய்து இப்போது நஷ்டத்தைக் கொண்டு வந்துவிட்டால் எக்ஸ்கிரேஷியா தருவதற்குக்கூட பணம் இல்லாமல் போய்விடுமே என்பதையும் ஆலோசனை செய்து வேலைநிறுத்தம் செய்யாமல் இருந்து இருக்கவேண்டும். நடந்து விட்டது. தயவு செய்து அதைப் பின் வாங்கிக்கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மூலமாக இது வெற்றி பெற முடியுமா என, 'வி வில் டிரைடு நெகோஷியேட் அன்ட் செட்டில் தி இஷ்யூ'.